**தலைப்பு 209 – தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம்**

------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மறறும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாரள் நாயகத்தின் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கிற்கு தொடர்புடைய கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முற்பண ‘‘பீ’’ கணக்கின் இறுதி மீதி ரூபா 20,824,017 ஆக காணப்பட்டதுடன், அத் திகதியில் திறைச்சேரி புத்தகங்கள் பிரகாரம் அம் மீதி ரூபா 20,560,109 ஆகும். அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 263,908 ஆக காணப்பட்டது. | இந்த வேறுபாடு தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றது. | இந்த வேறுபாடு அடையாளப்படுத்தப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(i) பிணைகள் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் ஆலோசனை பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் அப் பதிவேடு தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| **(ii) கடன் மற்றும் முற்பணப் பதிவேடு** | | |
| 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய கடன் மற்றும் முற்பணங்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய சீ.சீ.10 மாதிரி மற்றும் அந்த மாதிரியை அடிப்படையாக கொண்ட கடன் மற்றும் முற்பணப் பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் திறைச்சேரியின் கட்டுநிதி பொழிப்பு அறிக்கை பிரகாரம் (SA – 70) கட்டுநிதி பெறுவனவு மொத்த பெறுமதி ரூபா 272,902,979 ஆக காணப்பட்ட போதிலும், நிதி செயலாற்றல் கூற்றினுள் மற்றும் கட்டுநிதி பெறுவனவு ஆவணங்கள் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு கூட்டுத்தொகை ரூபா 268,638,000 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் திறைச்சேரி அறிக்கைகளுடன் ஒப்பிடும் போது கட்டுநிதி பெறுவனவு கூட்டுத்தொகையானது ரூபா 4,264,979 இனால் வேறுப்படுகின்றதுடன், அதற்கான விளக்கப்படுத்தல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | இந்த வேறுபாடு ஏனைய பெறுவனவுகளாவதுடன், நிதி செயலாற்றல் கூற்றினுள் நேரடியாக திறைச்சேரியிடமிருந்து பெறுவனவுகள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. | இந்த வேறுபாடு ஆராயப்பட்டு தீர்க்கப்படல் வேண்டும். |

### 2.2. பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பிரதான கட்டிடம் மறுசீரமைக்கப்பட்டு மத்திய வளி பதனாக்கம், தீயமைப்பு மற்றும் உயர் பாதுகாப்பு முறைமையொன்று தாபிக்கும் செயற்திட்டத்திற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிராததுடன், 2022 ஆம் ஆண்டிலும் இந்த பணிக்காக போதுமான நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையினால் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்வதில் தடை காணப்பட்டது. 2021 திசெம்பர் 31 இல் அச் செயற்திட்டத்தின் ஆலோசனை கட்டணமாக பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு (CECB) செலுத்துவதற்கு ரூபா 7,591,568 ஆன விலைப்பட்டியலும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனிக்கு (CESL) செலுத்துவதற்கு ரூபா 20,508,661 ஆன விலைப்பட்டியலும் காணப்பட்ட போதிலும், 2021 நிதிக் கூற்றுக்களினுள் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கீழ் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்காக போதுமான நிதியேற்பாடு இல்லாயையினால் நிதி அறிக்கையில் கடப்பாடு என குறிப்பிடப்படவில்லை. | ஆண்டிற்குரிய மொத்த பொறுப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

## 2.3. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| **(அ)** | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு | - | இந்த பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று தாபித்து பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும், உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையினால் மற்றும் அப் பிரிவின் ஊழியர்கள் இல்லாமையினால் 2021 ஆம் ஆண்டினுள் உள்ளக கணக்காய்வு பிரிவு விளைவற்று காணப்பட்டது. | பிரிவொன்று காணப்படுகின்ற போதிலும் உத்தியோகத்தர்கள் வெற்றிடமாக உள்ளது. | இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதாகும் |
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | | |
| | (i) நிதி பிரமாணம் 138 மற்றும் 245 (1) | - | செலவினம் அத்தாட்சிப்படுத்தப்படாது உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யப்படக் கூடாதெனிலும், 2021 ஆம் ஆண்டில் 41 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்காக பயன்படுத்தப்பட்டு கூட்டுத்தொகை ரூபா 4,052,364 ஆன தொகை அத்தாட்சிப்படுத்தாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | இந்த நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) நிதி பிரமாணம் 139 மற்றும் 267 (2) | - | கொடுப்பனவு செய்ய முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் கணக்கெடுக்காது குறைப்பாடுகளுடனான 29 உறுதிச் சீட்டுக்கள் பயன்படுத்தி கூட்டுத்தொகை ரூபா 3,261,430 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | இந்த நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (iii) நிதி பிரமாணம் 396 (ஆ) | - | 2018 யூலை 10 ஆம் திகதி தொடக்கம் 2021 ஒக்தோபர் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் வழங்கப்பட்ட, வழங்கப்பட்ட போதிலும் வைப்புச் செய்யப்படாத கூட்டுத்தொகை ரூபா 66,571 ஆன 12 காசோலைகளுக்கு தொடர்புடையதாக நிதி பிரமாணம் பிரகாரம் தீர்க்கப்படாது 2022 பெப்ரவரி 28 திகதியிலும் வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | இந்த குறைப்பாடு எதிர்காலத்தில் உருவாகாதிருக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | இந்த நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(இ)** | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | இந்த சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பரிசோதிக்கப்பட்டிருக்க-வில்லை. | 2022 ஆம் ஆண்டில் அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் பயன்பாடு பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஈ)** | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் வழிக்காட்டி இல 14 | | | | |
| | (i) 10.2 ஆம் பந்தி | - | திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைவொன்று பரீட்சிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க-வில்லை. | குறித்த அறிக்கை விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். | இந்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) 12.2 ஆம் பந்தி | - | இந்த பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 4 நடத்தப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டினுள் ஒரு கூட்டம் மட்டும் நடத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | இந்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------ | ------------------------- | ---------------------- |
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த கடன் தொகை ரூபா 305,930 ஆவதுடன், அப் பெறுமதியினுள் 05 ஆண்டுகளை மிகைத்த நிலுவை கடன் மீதி கூட்டுமொத்தம் ரூபா 264,875 ஆக காணப்பட்டது. அந் நிலுவை தொகையை அறவிடப்படுவதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பழைமையான கடன் மீதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்த நிலுவை கடன் மீதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் ஓய்வுப் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை கடன் தொகை ரூபா 377,836 ஆக காணப்பட்டதுடன், இதில் 01 ஆண்டினை மிகைத்த நிலுவை கடன் கூட்டுமொத்தம் ரூபா 207,429 ஆகும். இந்த கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த நிலுவை கடன் மீதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------ | ------------------------- | -------------------------- |
| சுவடிக் காப்பு பணிகளுக்கு தொடர்புடைய 61 தொழில்சார் உத்தியோகத்தர்களின் பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்றதுடன், அவ்வாறு நிறுவனத்தினுள் தொழில்சார் ஊத்தியோகத்தர்களின் கடுமையான பற்றாக்குறை சுவடி முகாமைத்துவத்திற்கு போன்று அதி சுவடி முகாமைத்துவத்திற்கும் அப் பணிகளின் தாமதத்திற்கும் காரணமாகியிருந்தது. | ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமையினால் வெற்றிடங்கள் நிரப்ப முடியவில்லை. இதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இந்த ஊழியர் பற்றாக்குறைக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கும் தற்போதுள்ள பதவியணி ஊடாக பணிகள் நிறைவேற்றப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2. பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் ஆண்டினுள் நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த, மொத்த பெறுமதி ரூபா 4,052,364 ஆன 09 பெறுகை பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதியேற்பாடு சேமிப்பினை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ் ஆண்டினுள் கொள்வனவு செய்வதற்கு முடியாது போனதுடன், 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆண்டினுள் திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றிக் கொள்வதற்கும் திட்டங்கள் காலத்திற்கேற்ப திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) திணைக்களத்தின் பிரதான அலுவலக கட்டிடம் மறுசீரமைக்கும் ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 992 மில்லியன் ஆன பெறுமதிக்கு நிர்மாணிப்பு பணி வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவை (தனியார்) கம்பனிக்கும், ஆலோசனை பணி, பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணிகயகத்திற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்த உடன்படிக்கை காலப்பகுதி 2019 சனவரி 07 ஆம் திகதி தொடக்கம் 2020 யூலை 07 ஆம் திகதி வரையான காலப்பகுதியாகும். அந்த காலப்பகுதி மீண்டும் 2021 மே 18 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. மீண்டும் அக் காலப்பகுதி 2024 யூலை 30 ஆம் திகதி வரையில் நீடிப்பதற்கு அமைச்சரவை விஞ்ஞாபன வரைவொன்று அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக அங்கீகாரம் 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் பெறப்பட்டிராததுடன், கட்டிடம் மற்றும் ஏனைய மறுசீரமைப்பு பணிகளும் 2022 மே வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் வரைவிற்காக பெறப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வரவு செலவு திணைக்களத்திடமிருந்து இது தொடர்பாக கலந்துரையாடலொன்று பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கூறுவிலை அழைப்பதற்காக குறித்த அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | பணி நிறைவேற்றப்பட்-டிராததமையினால் ஒப்பந்தக் காலம் நீடிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன், அங்கீகரிக்கப்பட்ட மொத்த கிரயம் மிகைத்து பணி நிறைவேற்றும் போது பணம் செலவிடப்படுவதற்கு நேருகின்றமையினால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு பணி நிறைவு செய்யப்படல் வேண்டும். |
| (இ) மேற்படி நிர்மாணிப்பின் போது அடையாளப்படுத்தப்பட்ட மேலதிக பணிகள் நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தொகை ரூபா 380,382,598 ஆன மதிப்பிடப்பட்ட தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதிலும், அதற்கான நிதியேற்பாடு 2022 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் முன்னுரிமை பணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அப் முன்னுரிமை பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு அங்கீகாரம் | வரவு செலவு சுற்றறிக்கை 03/2022 பிரகாரம் முன்னுரிமை பணிகள் அடையாளப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் முன்னுரிமை பணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், முன்னுரிமை பணிகள் அடையாளப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு அமைச்சரவை தீர்மானம் பெறப்பட்டு 05 மாதக் காலம் கடந்திருந்த போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட 2021 ஏப்ரல் மாதம் வரையிலும் அம் முன்னுரிமை பணிகள் அடையாளப்படுத்தப்படாமையினால், இந்த கட்டிடம் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்தல் மிகவும் தாமதிக்கப்பட்டிருந்தது.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்கு சொந்தமாக 700 சுவடி தொகுதிகளினாலான தேசிய பெறுமதியுடைய புத்தகங்கள், ஆவணங்கள், பழங்கால ஒப்பந்தங்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் இரகசிய ஆவணங்கள் போன்ற பாரம்பரிய சொத்துக்கள் காணப்பட்டன. இந்த விலை மதிக்க முடியாத சொத்துக்கள் நிதிக் கூற்றுக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிராததுடன், அச் சொத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சொத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த சொத்துக்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு ஆய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (**ஆ**) திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் கண்டி பிரதேச அலுவலகம் அமைந்துள்ள காணிகள் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அக் காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் உள்ளடங்கலான சொத்துக்கள் கடந்த ஆண்டினை போன்று 2021 ஆம் ஆண்டிலும் நிதிக் கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பரிந்துரை பெறப்பட்டதன் பின்னர் பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி கையகப்படுத்த முடிவதுடன், கண்டி பிரதேச அலுவலகம் அமைந்துள்ள காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இந்த காணி கையகப்படுத்தப்பட்டு மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட திணைக்களத்தின் ஓட்டுனர்கள் ஓய்வறை மற்றும் தச்சு அறை உள்ளிட்ட இரண்டு மாடி கட்டிடம் பல்வேறு சேதங்களுக்கு உட்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக ஆராய்ந்து கட்டிடத்தின் குறைப்பாடுகள் சீர் செய்வதற்கோ அக் கட்டிடத்திற்குரிய இட ஆய்வு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு அவ் அறிக்கைகள் பிரகாரம் காணப்படுகின்ற சிக்கல்கள் தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் கட்டிடம் தொடர்பாக கட்டிடங்கள் திணைக்களத்தின் பொறியியலாளரொருவர் 2022 பெப்ரவரி 10 ஆம் திகதி இட ஆய்வொன்று மேற்கொண்ட போதிலும், அறிக்கை எமக்கு கிடைக்கப்பெறவில்லை. அவ் அறிக்கை பெறப்பட்டவுடன் அதின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்கின்றேன். | இந்த இட ஆய்வு மேற்கொண்டு நீண்ட காலம் கடந்துள்ளது. அவ் அறிக்கை பெற்றுக் கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியுள்ளது. |

### 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 287 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாரான பதவியணி 136 ஆகியமையினால் வெற்றிட எண்ணிக்கை 151 ஆகும். அதன் பிரகாரம் திணைக்களத்தின் சிரேஸ்ட மட்டத்தின் பதவிகளில் 56 சதவீதமும், மூன்றாம் மட்டத்தின் பதவிகளில் 80 சதவீதமும், இரண்டாம் மட்டத்தின் பதவிகளில் 67 சதவீதமும் வெற்றிடமாக காணப்பட்டமை நிறுவனத்தின் நாளாந்த உத்தியோகப்பூர்வ நடவடிக்கைகள் மற்றும் செயலாற்றல் குறைவடைந்தமைக்கு காரணமாகியிருந்தது. | 01/2021 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளமையினால் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு முடியாதுள்ளது. | ஓட்டுமொத்த பதவியணியில் 53 சதவீதம் வெற்றிடமாகவுள்ளது. நீண்ட காலமாக இந்த சிக்கல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் நிறுவனத்தின் நாளாந்த பொதுமக்கள் சேவைகள் நிறைவேற்றுவதற்கு தடையாகியுள்ளது. இந்த சிக்கல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. |